CC No.78/2020 அ.சா.1: ஷேக் அப்துல்லா த/பெ.சம்சுதீன் நாள்: 13.08.2025

(எதிரி ஆஜர்)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் தற்சமயம் எந்த தொழிலும் செய்யவில்லை என்றால், கடையில் இருக்கிறேன். எத்தனை வருடமாக கடையில் இருக்கிறேன் என்றால், ஒரு வருடமாக கறி கோழிக்கடையில் இருக்கிறேன். இதற்கு முன் என்ன வேலை செய்து வந்தேன் என்றால், இரும்புக்கம்பி வியாபாரத்தில் பட்னராக இருந்தேன். அந்த நிறுவனத்தின் பெயர் கோல்டன் ஸ்டீல். அந்த கோல்டன் ஸ்டீல் நிறுவனம் எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால், 15.07.2013 அன்று ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி 15.07.2013 ஆம் தேதி நிறுவனம் தொடங்கப்பட்டது குறித்து எனது புகாரிலோ, முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். மேற்படி நிறுவனம் அறந்தாங்கி, காரைக்குடி ரோட்டில் தொடங்கப்பட்டது. அதில் எத்தனை நபர்கள் பங்கு தாரர்கள் என்றால், இரண்டு நபர்கள்.

2) எனது தம்பியின் மாமனார் பெயர் ஷேக் தாவுத் ஆகும். அவரும் மேற்படி நிறுவனத்தில் எனக்குள்ள பங்கில் பாதி பங்கு பாட்னராக இருந்தார். கோல்டன் ஸ்டீல் நிறுவனத்தின் GST யார் பெயரில் இருந்தது என்றால், எதிரி பெயரிலும், எனது பெயரிலும் இருந்தது. கோல்டன் ஸ்டீல் நிறுவம் ஆரம்பிக்கப்பட்டு முதல் ஆறு வருடங்கள் நான் முதன்மை நிர்வாகியாக இருந்து வந்தேன் என்றால், இல்லை. எதிரியின் தலைமையில் நான் அறந்தாங்கியில் இருந்ததால் கடையை பார்த்து வந்தேன். என்னை நம்பிதான் மேற்படி நிறுவனம் தொடங்கப்பட்டது என்றும், நான்தான் நிர்வகித்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தொடர்ந்து ஆறு வருடங்கள் நிர்வாகம் செய்து வந்த மேற்படி நிறுவனத்தில் எவ்வித இலாபமும் வரவில்லை என்றால், சரிதான்.

3) பின்பு இவ்வழக்கின் எதிரி ஷாஜகான் மேற்படி நிறுவனத்தை ஆறு வருடத்திற்கு பின்பு நிர்வாக பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார் என்றால், சரிதான். என்னை முழுமையாக வெளியேற்றிவிட்டு 09.10.2019 முதல் அவர் நடத்தி வந்தார். எதிரி நிறுவனத்தை நடத்தி வந்தபோது வெளிக்கடன்கள் ரூபாய் முப்பது இலட்சத்தை அடைத்தார் என்றால், இல்லை. நான் சொல்வது பொய் என்றாலும், எதிரி நிறுவனத்தை இலாப நோக்கில் கொண்டு சென்று மேற்படி கடனை அடைத்தார் என்றாலும், சரியல்ல. இலாப நோக்கில் நிறுவனத்தினை நடத்தி சென்ற எதிரியிடம் நான் நிறுவனத்தினை மீண்டும் கேட்டு பிரச்சனை செய்தேன் என்றால், சரியல்ல. எதிரிதான் ஆட்களை கூட்டிக்கொண்டு வந்து கடையை கைப்பற்றிக்கொண்டு 09.10.2019 அன்று எனக்கு காசோலையை அளித்துவிட்டு சென்றுவிட்டார்.

4) மேற்படி நிறுவனத்தினை என்னிடமிருந்து எதிரி கைப்பற்றிவிட்டார் என்பது பொய் என்றாலும், நான்தான் நிறுவனத்தில் உள்ள எதிரியின் காசோலை புத்தகத்தினை எடுத்துச் சென்றுவிட்டேன் என்றாலும், சரியல்ல. நான் எந்த வங்கி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால், இலட்சுமி விலாஸ் வங்கி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன். நான் கூறும் இலட்சுமி விலாஸ் வங்கி 2019 ஆம் ஆண்டு வேறு ஒரு வங்கியுடன் இணைக்கப்பட்டதா அல்லது கலைக்கப்பட்டதா என்றால், எனக்கு தெரியாது. மேற்படி இலட்சுமி விலாஸ் வங்கி தற்போது

செயல்படுகிறதா என்றால், அது காரைக்குடியில் உள்ளது, எனக்கு தெரியவில்லை. எனக்கு இலட்சுமி விலாஸ் வங்கி கலைக்கப்பட்ட விபரமும், வேறு வங்கியுடன் இணைக்கப்பட்ட விபரமும் எனக்கு நன்கு தெரியும் என்றால், எனக்கு தெரியாது. அதனால் நான் எதிரி செயல்படாத, இல்லாத வங்கியின் காசோலையை என்னிடம் கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

5) நான் நடத்திவந்த கோல்டன் ஸ்டீல் நிறுவனம் தற்சமயம் இல்லை என்றால், சரிதான். அதனால் மேற்படி நிறுவனம் மூடப்பட்டது குறித்து எனக்கும், எதிரிக்கும் சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றால், இல்லை. நான் சொல்வது உண்மை அல்ல என்றாலும், மேற்படி சமாதானத்தில் நானும், எதிரியும் கையொப்பம் செய்தோம் என்றால், சரியல்ல. அதுபோன்று எவ்வித ஆவணமும் எழுதப்படவில்லையா என்றால், இல்லை. நான் நடத்தும் நிறுவனத்தின் நில உரிமையாளருக்கு வாடகை முன்பணமாக ரூபாய் பத்து இலட்சம் செலுத்தப்பட்டது என்றால், ரூபாய் ஐந்து இலட்சம்தான் செலுத்தப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும், ரூபாய் பத்து இலட்சமும் வாடகை முன்பணமாக செலுத்ப்பட்டது என்றும் சொன்னால், சரியல்ல.

6) கடை நடத்துவதற்கு அமைக்கப்பட்ட செட்டுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் செலவானது என்றால், இல்லை. மூன்று இலட்சம்தான் ஆனது. நான் மூன்று இலட்சம் என்று உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றாலும், ஐந்து செலவானது என்று சொன்னால், சரியல்ல. இந்நிறுவனத்தினை மூடுவது தொடர்பாக நடந்த பேச்சு வார்தையில் கடைக்கு கொடுத்த வாடகை முன்பணத்தில் பத்து இலட்சம் பணத்தினை நானே பெற்றுக்கொள்வது என்றும், கடைக்கு போடப்பட்ட ஐந்து இலட்சம் மதிப்புள்ள செட்டை நானே பிரித்து வைத்துக்கொள்வது என்றும், மீதம் எதிரி எனக்கு ஐந்து இலட்சம் பணத்தினை கொடுத்துவிட வேண்டியது என்றும், ஒப்புக்கொண்டு ஒரு சம்மதக் கடிதத்தினை 07.12.2021 இல் தகுந்த சாட்சிகளின் முன்பு எழுதப்பட்டது என்றால், இல்லை.

7) பாக்கி ஐந்து இலட்சம் பணத்தினை இரண்டு தவணைகளாக எதிரி செலுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால், இல்லை. சமாதான பேச்சு வார்த்தையின் படி இவ்வழக்கை நான் திரும்ப பெற்றுக்கொள்வதாக கூறினேன் என்று சொன்னால், சரியல்ல. நான் ஒப்புக்கொண்படி வழக்கினை திரும்ப பெறாததால் எதிரி சொல்லியபடி இரண்டு தவணைகளில் பணத்தை எனக்கு செலுத்த முடியவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் இவ்வழக்கினை வாப்பஸ் பெறும் பட்சத்தில் எதிரி ரூபாய் ஐந்து இலட்சத்தினை தர தயாராக உள்ளார் என்று சொன்னால், சரியல்ல.

8) வழக்கு காசோலை நான்தான் பூர்த்தி செய்தேன் என்றால், இல்லை. அவர்தான பூர்த்தி செய்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் கொடுத்தார். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரி பெற்று கொண்டதற்கான ஒப்புகை அட்டையை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு கிடைக்கப்படவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.9 இல் தபால் துறை ஆவணத்தில் Item delivered என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. கொரணா காலம் என்பதால் எனக்கு தெரியவில்லை. ஒப்புகை அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அதில் உள்ள கையொப்பம் யாருடையது என்பது தெரிந்துவிடும் என்பதால் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல.

9) நான் வழக்குடன் தாக்கல் செய்த அ.சா.ஆ.10 ஒப்பந்த பத்திரம் எத்தனை தயார் செய்துள்ளேன் என்றால், எதிரி என்னிடம் ஒன்று கொடுத்தார். எதிரியின் மீது நான் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். எந்த வழக்கில் மேற்படி ஒப்பந்தத்தை

கொடுத்துள்ளேன் என்றால், தெரியவில்லை. அசல் தாக்கல் செய்யவில்லை. நோட்டரி பப்ளிக் முன்பு சான்றொப்பம் பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது. நோட்டரி பப்ளிக் எந்த ஊர் என்றால், அறந்தாங்கி. நான் நோட்டரி பப்ளிக் பெற்றுள்ள நபர் நீதிமன்ற பணிகளில் ஈடுபடாதவர் என்றால், அது எனக்கு தெரியாது. அவரை நான் பார்த்ததில்லை என்றால், கையொப்பம் பெறும்போது பார்த்தேன். மேற்படி ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர்களில் ஒருவர் எனது சித்தப்பா மற்றொருவர் எதிரி அழைத்து வந்த இராமநாதன் என்பவர்.

10) மேற்படி அ.சா.ஆ.10 ஐ யார் தயார் செய்தது என்ற விபரம் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். மேற்படி ஆவணம் நான் அவரசகதில் எதிரியிடமிருந்து இலாபம் பெறவேண்டும் என்பதற்காக விபரங்களை குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. அ.சா.ஆ.10 இல் நோட்டரி பப்ளிக் முத்திரையில் நோட்டரி பப்ளிக் உரிம முடிவு காலம் தெரியாத வகையில் முத்திரையிடப்பட்டுள்ளது என்றால், எனது பார்வைக்கு தெரியவில்லை. எனக்கு கண்ணாடி அணிந்தால்தான் தெரியவரும். எனக்கு நோட்டரி பப்ளிக்கின் உரிம காலம் முடிந்த பின்பு அவரிடம் வேண்டுமென்றே சான்றொப்பம் பெற்றுள்ளேன் என்று சொன்னால், எனக்கு தெரியாது.

11) எனக்கு அனைத்தும் தெரியும் என்றாலும், மோசடி நோக்கத்துடன் மேற்படி ஆவணம் அ.சா.ஆ.10 உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. மேற்படி கோல்டன் ஸ்டீல் நிறுவனத்திற்காக எதிரியிடம் ரூபாய் இருபத்தியெழு இலட்சம் பணத்தினை கொடுத்துள்ளேன் என்று எனது புகாரில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. நான் மேற்படி கோல்டன் ஸ்டீல் நிறுவனத்தில் இலாபத்தினை எதிரி எனக்கு கொடுக்கவில்லை என்று கூறுவது தவறு என்றாலும், மேற்படி நிறுவனத்தினை ஆறு ஆண்டுகள் நான் நடத்திவந்தபோது அதில் வந்த இலாபங்களை மறைத்துவிட்டேன் என்று சொன்னால், சரியல்ல. எதிரி என்னை அடியாட்களை கொண்டு மிரட்டினார் என்று சொல்வதும், என்னை நிறுவனத்தினை விட்டு வெளியேற்றிவிட்டார் என்று சொல்வதும் பொய் என்றால், சரியல்ல. ரூபாய் இருவத்தியேழு இலட்சம் பணத்தினை திரும்ப கொடுக்க எதிரி ஒப்புக்கொண்டதாக கூறும் சங்கதி பொய் என்றால், சரியல்ல.

12) 09.10.2019 தேதிய ஒப்பந்த ஆவணம் மோசடியானது என்று சொன்னால், சரியல்ல. எதிரி எனக்கு 01.02.2020 ஆம் தேதியிட்ட இரண்டு காசோலைகளை நான் ஒன்றாக வசூலுக்கு தாக்கல் செய்தேன். 01.02.2020 ஆம் தேதியிட்டு எந்த காசோலையையும், எதிரி எனக்கு இவ்வழக்கு சம்மந்தப்பட்ட எந்த காசோலையும் வழங்கவில்லை என்றால், சரியல்ல.

13) நானும் எதிரியும் நண்பராக இருந்து தொழிற் செய்து வந்தோம் என்றால், சரிதான். நண்பராக நானும் எதிரியும் இருக்கும்போது எதிரியின் இலட்சுமி விலாஸ் வங்கி கணக்கு அக்கவுண்ட் மூடப்பட்ட விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால், சரியல்ல. நான் எதிரிக்கு எவ்வித வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றாலும், அதனை எதிரி பெற்றுக்கொள்ளவும் இல்லை என்றாலும், சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் ஏதேனும் தொழிற் பிரச்சனை இருந்திருந்தால் அது சம்மந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில்தான் வழக்கு தாக்கல் செய்யாமல், மோசடியா இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. இந்த காசோலை எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.